**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# The Principles of Rama's Incarnation as Depicted by Nammalvar

**R. Priya[1*], Dr. S. Ganthidurai[2],**
[1]Ph.D. Research Scholar, Thiagarajar College, Madurai 09.
[2]Research Guide and Head of the Department of Tamil, Thiagarajar College, Madurai 09.
[*]Correspondence: priyarajavelphd22@gmail.com.

**Article Info**
Received on 22-April-2026, Revised on 22-April-2026, Accepted on 29-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

Nammalvar, revered by Vaishnavites as the Kulapati (head of the lineage) and the Prathama Acharya (the first teacher), possessed an immense devotion to Lord Rama. He was so distinguished in his piety that he is often regarded as a reincarnation of Rama himself. This article provides a detailed exploration of how Nammalvar's hymns elegantly illustrate the principles and attributes of Sri Rama—highlighting his prowess as a warrior, his virtuous character, his compassionate heart, his unwavering commitment to truth, and his profound respect for his parents.

***KEYWORDS:*** *Nammalvar, Lord Rama, Vaishnavism, Ramavatara, Tamil Literature, Bhakti Movement, Principles of Rama, Nalayira Divya Prabandham, Azhwars, Spiritual Virtues.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# நம்மாழ்வார் காட்டும் இராமாவதாரக் கொள்கைகள்

[1]**இரா.பிரியா,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை-09.
[2]**முனைவர் சு.காந்திதுரை,** இணைப்பேராசிரியர், நெறியாளர், துறைத்தலைவர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை-09.1.

**ஆய்வுச்சுருக்கம்**

வைணவர்களால் குலபதி என்றும் பிரதம ஆச்சாரியார் என்றும் போற்றப்படுபவர் நம்மாழ்வார் இராமபிரான் மீது பெரும் பற்றுக் கொண்டவர். இராமனின் மறுஅவதாரம் என்றழைக்கும் வகையில் சிறந்தவர். இராமன் எத்தகைய வீரன் குணநலன் மிக்கவன், கருணையுள்ளம் கொண்டவன், சத்தியம் தவறாதவன். தந்தை, தாயை மதிப்பவன் என்ற எண்ணற்ற குணநலன்களை தன்னகத்தே கொண்ட ஸ்ரீ இராமபிரானின் கொள்கைகளை நயம்பட எடுத்துக்கூறி நம்மாழ்வார் பாடியுள்ள திறத்தினை இக்கட்டுரையின் வழியே விளக்கமாக காணலாம்.

**முன்னுரை**

நம்மாழ்வார் இராம அவதாரத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, தனது திருவாய் மொழி மற்றும் பிற பிரபந்தங்களில் இராமபிரானின் கல்யாண குணங்களையும் அவதாரச் சிறப்புகளையும் போற்றியுள்ளார். பெரியதிருவந்தாதி, திருவாசிரியம் போன்றவற்றில் இராமனை கருணை மற்றும் தர்மத்தின் மிக உயர்ந்த வெளிப்பாடாகவே போற்றுகின்றார். நம்மாழ்வார் காட்டும் இராமாவதாரக் கொள்கைகளை விரிவாக காணலாம். நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் இராமபிரானைப் பற்றி செய்திகள் அறுபத்து மூன்று பாசுரங்களில் இடம்பெற்றுள்ளன.

**நம்மாழ்வாரின் இராமன்**

நம்மாழ்வார் இராமபிரானை அறம் மற்றும் அசைக்க முடியாத அன்பின் உருவமாக போற்றுகின்றார். தர்மத்தின் வடிவமாகவும் கருணையின் உருவமாகவும் காண்கிறார்.

“கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ
புற்பா முதலாப் புல்லெறும் பாதியொன்றின்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக் குய்த்தனன் நான்முகனார் பெற்றநாட்டுளே”

(திருவாய்மொழி-3381)

என்று திருவாய்மொழியில் வரும் இப்பாசுரம் இராமபிரானின் அறத்தையும், நற்பண்பினையும் எடுத்துக்கூறி எவர் ஒருவரும் வேறு தெய்வங்களையோ, குணங்களையோ கற்றுப்போற்ற மாட்டார்கள் எனவும், இராமனை மட்டுமே போற்றுவார்கள் என்றும் பாடுகிறார். அறத்தின் வழியும் நற்பண்பின் வழியும் இராமனது வழி என்று நம்மாழ்வார் எடுத்துரைத்துள்ளார்.

நம்மாழ்வார் இராமரின் சீல குணங்கள் கருணை மற்றும் சத்தியம் காக்கும் பண்பு ஆகியவற்றில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இராமபிரானின் அவதாரத்தை "குணக்குன்றம்" என்று போற்றுகிறார்.

"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

(திருக்குறள்-504)

ஒருவரின் குணநலன்களை ஆராய்ந்து நங்குணங்கள் மிகையாக இருப்பின் அவரைத் துணையாக கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் உரைக்கு ஏற்ப விளங்குபவன் இராமபிரான்.

**திருவாய்மொழியில் இராமவதாரம்**

திருவாய்மொழியில் பல பாசுரங்களில் இராமாயண நிகழ்வுகளை கதையாக நயம்பட பாடியுள்ளார். குறிப்பாக இராவணவதம், சீதாபிராட்டியைத் தேடி சென்றது மற்றும் இராம ராஜ்ஜியம் போன்ற நிகழ்வுகளைப் புகழ்ந்து பாடியுள்ளார். இராம அவதார சிறப்புகளையும் போற்றியுள்ளார்.

"சூட்டாய நேமியோன் தொல்லரக்கன் இன்னுயிரை
மாட்டே துயரிழைத்த மாயவனை – ஈட்ட
வெறிகொண்ட தண்டுழாய் வேதியனை நெஞ்சே
அறிகண்டாய் சொன்னேன் அது"

(நாலாயிரத்திவ்விய பிரபந்தம் – 2650)

என்று, தீமைகளின் வடிவான இராவணனை அழித்தொழித்த இராமபிரானை நம்மாழ்வார் பாடுகிறார்.

**பரிபூரணமான தர்மத்தின் வடிவம்**

இராமபிரான் தர்மத்தின் உருவமாகவே நம்மாழ்வாரால் பார்க்கப்படுகிறார். மனிதர்கள் தர்மநெறியுடன் எப்படி வாழ வேண்டும் என்பதனைத் தன் வாழ்வின் மூலமாக மக்களுக்கு எடுத்துக் காட்டியவர்.

"ஓவாத் துயர்ப்பிறவி யுட்படமற் றெவ்வெவையும்
மூவாத் தனிமுதலாய் மூவுலகும் காவலோன்"

(நாலாயிரத் திவ்விய பிரபந்தம்-2868)

இராமபிரானின் திருஅவதார நிகழ்வினை,

வந்தாய்போ லேவந்தும் என்மனத் தினைநீ
சிந்தாமல் செய்யாய் இதுவே யதுவாகில்

கொந்தார்காயாவின் கொழுமலர்த் திருநிறத்த

எந்தாய், யானுன்னை எங்கு வந்தணுகிற்பனே.

(மேலது 2912)

என்று இராமாவதார நிகழ்வுகளை நம்மாழ்வார் நமயம்படக் கூறுகிறார்.

நம்மாழ்வாரைப் பொறுத்தவரை அவதாரங்கள்யாவும் வரலாற்று உண்மைகளே அதோடு அவற்றில் திரும்பத்திரும்ப தத்துவ தரிசனமும் காண முடிகிறது.

**தயரதன் பெற்ற மரகத மணித்தடம் இராமன்**

இராவணனால் அசோகவனத்தில் சிறையிருந்த சீதை, இருந்தமாநிலம் செல்லரித்திடவும் எழாதவளாய் அங்கு இருந்தாள். அவளே அனுமனிடம் இப்படிச் சொல்கிறாள். நான் இருந்த இடத்தை விட்டு ஒரு பொழுதும் நீங்கிச்செல்லமாட்டேன். சில சமயங்களில் அங்குள்ள தாமரைத்தடாகம் நோக்கிப் போவேன் என்னுயிர் காக்கும் நோக்கத்திலேயே அங்கு செல்வேன்.

அந்தப் பொய்கையும் இராமபிரானின் தாமரை போலும் கண், கை, கால் போன்றவற்றைக் காட்டி என் ஆருயிரைக் காக்கும் என்கிறாள்.

“தீர்வு இலேன் இது, ஒரு பகலும், சிலை

வீரன் மேனியை மானும் இவ்வீங்கு நீர்

நாரநாள் மலர்ப் பொய்கையை நண்ணுவேன்,

சோரும் ஆருயிர் காக்கும் துணிவினால்”.

(கம்பராமாயணம்-5369)

இதனை முழுதும் விளங்கிட கொள்ள, நம்மாழ்வாரே நமக்கு துணையாகிறார்.

“மாயக் கூத்தா! வாமனா!

விணையேன் கண்ணா! கண்கைகால்

தூய செய்ய மலர்களாச்

சோதிச் செவ்வாய் முகிழதா,

சாயல் சாமத் திருமேனி

தண்பா சடையா, தாமரை நீள்

வாசத் தடம் போல் வருவானே

ஒருநாள் காண வாராயே”

(நாலாயிர திவ்வியப்பிரபந்தம்-3491)

இதே கருத்து "தயரதன் பெற்ற மரகத மணித்தடம்" (3674) எனத் திருவாய் மொழியில் பின்னரும் வருவதினைகாண்க. இப்பாடல்கள் ஆழ்வார் தாமான தன்னையிற் பாடியவவை. இவை சீதையின் மனக்கருத்தை உரையாடல் வழிப்புலப்படுத்த கம்பனுக்கு உதவியமை காணலாம்.

இராமனுக்கு முடிசூட்டும் முடிவினைத் தசரதன் வாயிலாக அறிந்த வசிட்டன், மக்கள் உகக்கும் ஒரு மன்னனாக இராமபிரான் திகழ்வான் என்பதை,

"கற்றவர் கற்றிலாதவரும்

உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பார்"

திருவாய்மொழி-1352)

என்கிறார். பின்னரும் ஒன்பதினாயிரம் பாடல்கள் தாண்டிப் பரதன் நிலையை விளக்குமிடத்து,

"உண்ணும் நீர்க்கும் உயிர்க்கும் உயிரவன்

எண்ணும் கீர்த்தி இரராமன்

(கம்பராமாயணம்-10,158)

என்று கவிக்கூற்றாக வருவதும் கருதத்தக்கது.

இவ்வடிகளில்,

"உண்ணும் சோறு பருகும் நீர்

தின்னும் வெற்றிலையும் எல்லாம்

கண்ணன் எம்பெருமான்"

(திருவாய்மொழி 3293)

என்னும் திருவாய்மொழி வாயிலாக நம்மாழ்வார் எடுத்துரைக்கும் பாங்கினை அறியலாம்.

**பரிவுள்ளம் கொண்ட இராமன்**

பறவைகள், அணில்கள், வானரங்கள் உட்பட அனைத்து உயிரினங்களிடமும் அன்பும் பரிவும் காட்டுபவன் இராமபிரான். அனுமன், குகன், சுக்ரீவன், போன்றவர்கள் தன் மீது அன்பு பூண்டவர்களை இராமன் ஒரு போதும் கைவிட்டதே இல்லை. அன்பு என்னும் நிலைக்கு கட்டுப்பட்டு நிற்பவன் என்பதனை ஆழ்வார் உணர்த்தும் விதமாக விளக்குகின்றார்.

பாகுபாடற்ற நட்பு (சரணாகதி) குகன், (வேடன்) அனுமன், சுக்ரீவன் (வானரன்) விபீஷணன் (அசுரன்) இவர்களிடம் எவ்வித பாகுபாடுமின்றி அனைவரையும் நண்பர்களாக ஏற்றுக்கொண்டவன் இராமபிரான்.

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்

விழுமந் துடைத்தவர் நட்பு"

(திருக்குறள்-107)

Copyright © Author(s), Article DOI: https://doi.org/10.63300/kijts06012026.02 

ஏற்றத்தாழ்வு பார்க்காமல் அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்டியவன், ஏகபத்தினி விரதனாக வாழ்ந்து ஒழுக்கத்தின் மேன்மையை நிலைநாட்டியவன் இராமபிரான்.

**முடிவுரை**

நம்மாழ்வார் இராமாயணக் கொள்கைகளை கற்றுத்தெளிய வலியுறுத்துவதன் மூலம் இராமபிரான் சரிதை சரியாகத் தெரிந்தாலே போதும் மனிதர்கள் அறநெறியுடன் வாழமுடியும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றார்.

ஆழ்வார் இராமபிரானை, தர்மம், பக்தி, எளிமை மற்றும் சரணாகதி ஆகியவற்றின் சங்கமமாகவே காண்கிறார். இராம அவதாரத்தோடு தொடர்புடைய பல திருத்தலங்களை மங்களாசாசனம் செய்துள்ளார்.

நம்மாழ்வார் தனது பாசுரங்களில் இராமபிரானை அதீத பக்தி உணர்வுடன், சரணாபதி தத்துவத்தின் உச்சமாகத் தரிசித்துள்ளார்.

இராமபிரான் தசரத குமாரனாக அவதரித்து பின்னர் மீண்டும் பரமபதம் செல்லும் தத்துவத்தையும் தன்வாழ்வில் காட்டியவர் என்று இராமபிரானின் இராமாயணக் கொள்கைகளை நம்மாழ்வார் பாசுரங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

1. அ.சீனிவாசராகவன் – நம்மாழ்வார் – நான்காம் பதிப்பு – 2023 – சாகித்திய அகாதெமி, வெளியீடு – சென்னை.
2. இரா.வ.கமலக்கண்ணன் – நாலாயிர திவ்யப் பிரபந்தம் – நான்காம் தொகுதி – 2015 – வார்த்தமானன் பதிப்பகம் – சென்னை.
3. அழகர் நம்பி – நாலாயிர திவ்யப்பிரபந்தம் – மூன்றாம் தொகுதி – 2017 – கவிதா வெளியீடு – சென்னை.
4. சாலமன் பாப்பையா – கம்பனின் தமிழமுது – 2018- கவிதா பப்ளிகேஷன் – சென்னை.
5. கோ.மணி, ர.ரேகா- மூன்றெழுத்தில் கம்பரின் முழுக்காப்பியம்-2018- உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் நவநீதம் அச்சகம், சென்னை.
6. அ.ச.ஞானசம்பந்தன் – கம்பராமாயணம் – இராமாவதாரம் – கம்பன் அறநிலை – கோவை- 2004.